பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

மலர் 19 மார்கழி 8 முஹறம் 11 இதழ் 313
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 23-12-77

# பேரவையில் சபாஷ் பெற்ற யாழ்ப்பாணம் பஸ் டிப்போ!

[கொழும்பு]

தேசிய அரசுப் பேரவையில் நேற்று யாழ். பஸ் டிப்போ பெரும் பாராட்டைப் பெற்றுக்கொண்டது.

தேசிய அரசுப் பேரவையில் போக்குவரத்து அமைச்சு மான்யம் மீதான குழுநிலை விவாதத்தில் பேசிக்கொண்டிருந்த போக்குவரத்து பிரதி அமைச்சர் திரு. எச் குலரத்னதான் யாழ். டிப்போவுக்கு இந்தப் பாராட்டை வழங்கினார்!

''இலங்கையின் எந்தப்பகுதியிலும் நடைபெறும் பஸ் சேவைகளில் யாழ். டிப்போ தனித்துவத்துடன் இயங்குகிறது. அந்தடிப்போ மிகவும் துப்பரவாக — சுத்தமாகக் காணப்படுகிறது, பஸ்களும் தினசரி சுத்தப்படுத்தப்படுகின்றன. பழுதடையும் பஸ்கள் உடனடியாகத் திருத்தப்படுகின்றன. இப்படியான சிறப்பான சேவை, நாட்டின் மற்றைய பகுதிகளில் நடைபெறுவதில்லை. பஸ்சேவைகளும் சிறப்பாக நடைபெறுகின்றன'' என்று புகழ்பாடி சபாஷ் வழங்கினார் பிரதி அமைச்சர்.

மற்றுமொரு கட்டத்தில் பிரதி அமைச்சர் எச். குலரத்

[6ம் பக்கம் பார்க்க]

# வடக்கு - கிழக்கு ரயில் சேவை

# விரைவில் ஆரம்பமாகும்!

## அமைச்சர் முகமட் தகவல்

[கொழும்பு]

**வடக்கு—கிழக்கு நேரடி ரயில்சேவை, விரைவில் ஆரம்பித்துவைக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் ஜனுப் எம். எச். மொகமட் நேற்று தேசிய அரசுப்பேரவையில் அறிவித்தார்.**

முல்லைத்தீவு தேசியஅரசுப் பேரவை உறுப்பினர் திரு. எக்ஸ். எம். செல்லத்தம்புவின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்ட உறுதிமொழியை போக்குவரத்து அமைச்சர் பேரவையில் வழங்கினார்.

முல்லைத்தீவு எம். பி. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு நேற்று போக்குவரத்து மான்யம் மீதான குழுநிலை விவாதத்தில் பேசுகையில்;

### 50 ஆண்டுகளாக

''யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பு செல்லும் ரயில் பிரயாணிகள் கடந்த பல ஆண்டுகளாக சொல்லமுடியாத கஷ்டம் அனுபவித்து வருகின்றனர் 1927ம் ஆண்டு இப்பாதைகளில் ரயில்சேவை அமைக்கப்பட்ட போதிலும், கடந்த 50 ஆண்டுகளாக யாழ்ப்பாணம் -மட்டக்களப்பு ரயில் பிரயாணிகள் கஷ்டம் அனுபவித்தே வருகின்றனர். காங்கேசன்துறைக்கும் மட்டக்களப்புக்குமிடையே தனி ரயில்சேவை ஆரம்பிக்கப்பட வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

[6ம் பக்கம் பார்க்க]

## 50 பேர் மீது வழக்கு

[வவனியா]

ஊழியர்களுடைய சேமலாப நிதி இதுவரைகட்டத் தவறிய 50க்கு மேற்பட்டவர்கள் மீது வவனியா தொழிற்திணைக்களத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

புங்குடுதீவு

## ரூ.35,000 நகைக் கொள்ளை: ஒருவர் கைது!

[யாழ்ப்பாணம்]

மூன்று மாதங்களுக்கு முன்னர் புங்குடுதீவில் இடம்பெற்ற 35 000 ரூபா நகைக்கொள்ளை தொடர்பாக சந்தேகநபர் ஒருவர் நேற்று கைதுசெய்யப்பட்டார்.

இவரிடமிருந்து கொள்ளை போனதாகக் கூறப்படும் நகைகளில் சுமார் 20,000 ரூபா பெறுமதியான நகைகள் மீட்கப்பட்டன!

புங்குடுதீவைச்சேர்ந்த யோகம்மா வீட்டில் ஐந்துபேர் துப்பாக்கிமுனையில் 35,000 ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்ததும் இவர்கள் மீது யாழ். பொலிஸார் பரவலாக வலைவிரித்திருந்ததும் தெரிந்ததே.

யாழ். பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த குற்றத்தடுப்புப் பிரிவுப்பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் சுமணபண்டா, உதவி பொலிஸ்இன்ஸ்பெக்டர் முத்துபண்டா, சார்ஜன்ட் பூரா ஆகியோர் மேற்படி கொள்ளை சம்பந்தமாக நவாலியைச் சேர்ந்த தியாகலிங்கம் என்பவரை கைதுசெய்துள்ளனர். மேலும் நாலுபேரை தேடி வலைவிரித்துள்ளனர்.

## கண்டி-குருநாகலை பஸ்சேவை பாதிக்கப்பட்டது

(கம்பளை)

தொடர்ச்சியான மழையினாலும், காலநிலை சீர்கேட்டினாலும், மலையக ரயில் போக்குவரத்து தாமதமாகியுள்ளது.

(6-ம் பக்கம் பார்க்க)

வயோதிப மாதுவின்

# கழுத்தைநெரித்து திருட முயன்றவர்!

## பொதுமக்களிடம்மாட்டிக்கொண்டார்!

[வண்ணார்பண்ணை]

வயோதிபமாது ஒருவரது கழுத்தை நெரித்து பணம் திருடமுயன்ற இளைஞர் ஒருவரை கையும் மெய்யுமாக பிடித்த பொதுமக்கள் அவரை பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

புதன்கிழமை இரவு கல்வியங்காட்டில் இச் சம்பவம் நிகழ்ந்தது.

நல்லூர் அரசடியைச்சேர்ந்த வாலிபர் ஒருவரே இவ்விதம் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவருடன் கூடவந்த மற்றுமொரு வாலிபனை பொலிசார் தேடிவருகின்றனர்.

கல்வியங்காடு சந்தியில் உள்ள கடை ஒன்றில் இருந்த வயோதிபமாது ஒருவரின் கழுத்தை இவ் வாலிபன் நெரித்தபோது அவ்விடத்தில் நின்ற மற்றும் சிலர் கண்டதால் பொதுமக்கள் பலரும் இவ் வாலிபனை மடக்கிப்பிடித்தனர். இதுபற்றி யாழ்ப்பாணம் பொலிசார்விசாரணை செய்துவருகின்றனர்.

# அரபு பகுதிகளிலிருந்து இஸ்ரேல் வாபஸ் பெறுமா?

## கிறிஸ்மஸ் தினத்தன்று எகிப்திய உச்சி மாநாடு

கெய்ரோ, டிச. 22

எகிப்திய-இஸ்ரேலிய தலைவர்களின் உச்சிமகாநாடு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்மஸ்தினத்தன்று இஸ்மாலியாவில் ஆரம்பமாகும்.

இதற்கான இறுதிக்கட்ட ஏற்பாடுகள் யாவும் இன்று பூர்த்தியடைந்ததாக கெய்ரோ வானொலி அறிவித்தது.

மூன்று தினங்கள் வரை நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் இந்த உச்சி மகாநாட்டில், எகிப்தியஅதிபர் அன்வர் சதாத்தும், இஸ்ரேலியப் பிரதமர் பெகினும் கலந்துகொள்கின்றார்கள்.

இதற்கிடையே. உச்சிமகாநாடு ஏதோ ஒருவகையில் வெற்றியை அளிக்க வகைசெய்யும் பொருட்டு . பல்வேறு யோசனைகள், முன்னேற்பாடாகப் பரிசீலனைசெய்யப்பட்டு வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

கைப்பற்றப்பட்ட அரபுப் பகுதிகளிலிருந்து இஸ்ரேலியத் துருப்புக்களை வாபஸ்பெறுவது

(6- பக்கம் பார்க்க)



# ராணுவத்தினரின் தலையாய கடமை பற்றி பிரதமர்

[கொழும்பு]

'இராணுவத்தினரின் தலையாய கடமை, மக்கள் அளித்த தீர்ப்பை பாதுகாப்பதே' என்று பிரதமர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று காலிமுக இராணுவ மைதானத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் குறிப்பிட்டார்.

'இந்த நாடு 1948-ல் சுதந்திரமடைந்தது. கடந்த முப்பது வருடங்களாக இந்த நாட்டு மக்களை இராணுவத்தினர் பாதுகாத்து வருகின்றனர். மக்களைப் பாதுகாப்பது அவர்களின் பெரும் கடமைகளில் ஒன்றாகிறது.' என்று தெரிவித்த பிரதமர் மேலும் கூறியதாவது:

'ஜனநாயக நாடொன்றில் மக்களுக்குப் பூரண சுதந்திரம் உண்டு மக்கள் தங்களின் தீர்ப்பை வழங்க அவர்களுக்கு உரிமை இருக்கிறது, மக்கள் அளித்த தீர்ப்பை மக்களால்தான் மாற்ற முடியும், இதில் இராணுவம் முக்கிய பங்காற்றுகிறது

'எம் பிக்களையோ அல்லது அரசாங்கத்தையோ பாதுகாப்பதுதான் இராணுவத்தினரின் கடமை அல்ல. மக்கள் அளித்த தீர்ப்பைப் பாதுகாக்க வேண்டும். மக்கள் பெற்ற ஜனநாயக சுதந்திரத்தைப் பாதுகாத்து அவர்களைக் காப்பாற்றுவதுதான் இராணுவத்தினரின் தலையாய கடமை' என்று பிரதமர் குறிப்பிட்டார்

(ம)

# இன்று நினைவாஞ்சலி

தோற்றம் 24 2 1924



மறைவு 3 1 1977

## அமரர் திரு. இ. கிருஷ்ணசாமி

(முந்திரிகை தோட்டம், உரும்பிராய்)

எம்மை வாழவைத்த குலவிளக்கே நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று ஓடிவிட்டது. நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் நாம் உம்மை நினைத்து ஏங்குகிறோம். ஆறவில்லை எம் நெஞ்சம். உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனை பிரார்த்திக்கும், அன்புமனைவி, சகோதரர், மைத்துனர், மற்றும் உற்றார், உறவினர்கள்.

முந்திரிகைத்தோட்டம்,
உரும்பிராய்.

உரும்பிராய். 7994

## நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றம்

வழக்கு இல: ஈடு/62
பொன்னையா மயிலன்,
பொற்பதி ரோட், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்
வழக்காளி

எதிராக

இல: 1/20, 2-ம் ஒழுங்கை, பலாலி ரோட் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
1. இரத்தினம் நித்தியானந்தராசாவும் பெண்
2. விஜயலெட்சுமியும்

எதிராளிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு/62-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் காணி 1978-ம் ஆண்டு தை மாதம் 30-ந் திகதி (1978-1-30) திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிக்கு ரூபா 2545 சதம் 33ம் மேலும் ரூபா 2000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 24 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1976-ம் ஆண்டு சித்திரை மாதம் 1-ந் திகதியிலிருந்து முழுத்தொகையும் இறுக்கப்படும் வரையும் 24 வீத வட்டியுடன் கொடுத்து வழக்குச்செலவு ரூபா 496 சதம் 80 கொடுக்கவேண்டும்.

### குறித்த ஆதன இடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி, வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கிறை "மாணிக்கன்காடு" நில. பர. 0 குளி 14 1/10 இது உத்தரவு பெற்ற நில அளவைக்காரன் ரி. கந்தையா 29-9-66ல் அளந்து விபரித்த 3008-ம் இலக்கப்படத்தில் 3-ம் துண்டு. இந்த நிலப்பரப்பு சைவர் குளி பதினாலும் பத்தில் ஒன்றுக்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு நல்லதம்பி செல்லையாவினுதனம், மேற்கு வயிரவர் கோவிலினுதனம், தெற்கு ஒழுங்கை இதடங்கலும் (முற்பதிவு டி 336/200)

சி. ஆ. த. வடிவேலு ஜே. பி.
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
விலைமதிப்பாளரும்.

"வடிவேல் உதயம்",
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்,
3-12-77. 7989


## ரூபாய் 1500/- க்கு மேல் வருமானம் பெற விரும்புகிறீர்களா?

நீங்கள் நேர்மையும், திடகாத்திரமும், திறமையும், நன்கு அறிமுகமும் உள்ளவர்களா? அப்படியான திறமைசாலிகளை இலங்கையில் முன்னணிவகிக்கும்

பிறின்ஸ் கம்பனி ஒன்று யாழ்.குடாநாட்டில்
"கன்வசர்களாக"

தேர்ந்தெடுக்க முன்வந்துள்ளது
உங்களைப்பற்றிய முழுவிபரங்களடங்கிய
விண்ணப்பங்களை மார்கழி 30-ம் திகதிக்கு முன்னதாக
அனுப்பிவைக்கவும்

Advt., No: 7981, C/o EELANADU Ltd, JAFFNA.
7981

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# யாழ். வளாகத்தில் நாளை கலைவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வளாகத்தின் இந்துமன்றத்தினரின் கலைவிழா இராமநாதன் மண்டபத்தில், இந்துமன்றத் தலைவர் சு. பாக்கியநாதன் தலைமையில் நாளை நடைபெறவிருக்கிறது. காலையிலிருந்து இரவு வரை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

காலை 8-30 மணிக்கு நடைபெறும் மரம் நாட்டுவிழாவில் பேராசிரியர் ஹூதர் ஜெயசிங்கம் பேராசிரியர், வி. கே. கணேசலிங்கம், தொழிலதிபர்கள் திரு. ஆர். அரசரத்தினம், திரு. க. கனகராசா ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

காலை 9 மணிக்கு பேராசிரியர் சோ. செல்வநாயகம் மங்கள விளக்கேற்றி வைப்பார். 9-05 மணிக்கு மன்றச்செயலாளர் திரு. எஸ். சிவலிங்கராசா வரவேற்புரை நிகழ்த்துவார். 9-15மணிக்குபேராசிரியர் கா. இந்திரபாலா ஆசியுரைவழங்குவார்.

காலை 9-30மணிக்குக் கருத்தரங்கு இடம்பெறும். கலந்துகொள்வோர் விபரம் வருமாறு 'இந்துப் பண்பாடு-ஒரு வரலாற்று நோக்கு" ---பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள்.

'சமய உணர்வு' ---துணைவிரிவுரையாளர் திரு. ப. கோபாலகிருஷ்ணன்.

தத்துவமரபு — துணைவிரிவுரையாளர் திரு. சோ. கிருஷ்ணராசா.

கலைவளர்ச்சி—இந்து நாகரிகத்துறைத் துணைவிரிவுரையாளர் திருமதிஞானகுலேந்திரன்.

சமூகவாழ்க்கை—யாழ்வளாகத் துணை நூலகர் திரு. நா. சுப்பிரமணியம்.

மாலை நிகழ்ச்சிகள் இந்துமன்ற தலைவர் சு. பாக்கியநாதன் தலைமையில் மாலை 5-30 மணிக்கு ஆரம்பமாகும். வளாகத்தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். மாலை 6 மணிக்கு திரு. எஸ். சிவலிங்கராசா வரவேற்புரை இரவு 6 05 ஆசியுரை கலாநிதி அ. சண்முகதாஸ் 6-15 மணி நாட்டியாஞ்சலி, 6-45 மணி இன்னிசைவிருந்து திரு. எஸ். மாணிக்கராசா (இராமநாதன் நுண்கலைப் பிரிவு) இரவு 7-00 மணி நாடகம் மகாகவியின் 'புதியதொரு வீடு'. [க-அ]

## மிருசுவில் கொலை:

# சந்தேக நபர்கள் கோர்ட்டில் சரண்

[யாழ்ப்பாணம்]

மிருசுவிலில் தென்னைமரத்தைத் தறித்து அதில் இருந்தவரைக் கொன்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகப் பொலிசாரால் தேடப்பட்டு வந்த சந்தேகநபர்கள் மூவரும், நேற்று சாவகச்சேரி நீதவான் திரு. கே. பாலகிட்ணர் முன்னிலையில் சரணடைந்தனர்.

தென்னைமரம்ஒன்றில் கள்ளு சீவிக் கொண்டிருந்தபோது நீலன் சின்னத்தம்பி என்பவர் மரத்துடன் தறித்துவிழுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேக நபர்கள்தேடப்பட்டுவந்தனர்.

சட்டத்தரணி எஸ். பாலகிருஷ்ணன்மூலம் சந்தேக நபர்களான கந்தசாமி, நடராசா, செல்வராசாஆகியோர், கோர்ட்டில் சரணடைந்தனர்.

நீதவான் சந்தேகநபர்களை இம்மாதம் 30ம் திகதிவரை ரிமாண்டில் வைக்க உத்தர விட்டார். [க-அ]

# கைதடிமுகாம் அகதிகள் விஸ்வமடு சென்றனர்

## அங்கு இவர்கள் குடியேறுவர்

(யாழ்ப்பாணம்)

கைதடி அகதிகள் முகாமிலுள்ள இலங்கையரான அகதிகள், நேற்று இரண்டு பஸ்களில் விஸ்வமடுவுக்குக்கொண்டு செல்லப்பட்டனர்.

விஸ்வமடுவில், அகதிகள் குடும்பங்களுக்குச் சொந்தமாக காணியும், கூடாரம், படுக்கை விரிப்பு, போர்வைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையல்லாத அகதிக் குடும்பங்கள், கிளிநொச்சி, வவனியா முதலான பகுதிகளிலுள்ள தனியார் காணிகளில் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை அகதிகள் புனர்வாழ்வுச்சபைசெய்திருந்தது. இவர்களுக்கு வீடு கட்டவும் பணம் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையாரான சிலஅகதிக் குடும்பங்களை அரியாலையில் குடியேற்றவும், ஆலோசிக்கப்பட்டுவருகிறது.

கைதடி முகாமில் தற்போது ஒரு சில அகதிகள் குடும்பங்கள் மட்டுமே உள்ளன. (க-அ)

## பஜனை செய்தவரை அரவம் தீண்டியது

(திருகோணமலை)

திருவெம்பாவை பஜனைக் கோஷ்டியில் கலந்துகொண்ட ராஜ் என்பவர், பாடிக்கொண்டு சென்றபோது அரவம் தீண்டியதால் மயக்கமடைந்தநிலையில் சிகிச்சைக்காக, வெள்ளைமணல் என்ற இடத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டார். இதன்பின் பஜனை கோஷ்டி தொடர்ந்து சென்றது. (அ)

## நிர்வாகிகள்

(மட்டுவில்)

மட்டுவில் மோகனதாஸ் சனசமூகநிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம், நிலையத் தலைவர் திரு வே. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. க. வைரமுத்து, உப-தலைவர்: திரு. க. ஜெகதாஸ், செயலாளர்: திரு. கா. அமிர்தலிங்கம், உப-செயலாளர்: திரு. க நடேசகிருஷ்ணன், தனாதிகாரி: சி. மனோகரன், உப-தனாதிகாரி: ஐ. கிருஷ்ணன். (உ)


## வரிவிளம்பரம்

### தேவை

"யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலைக்கு இடமாற்றத்தில் வரும் (இருவரும்) வைத்தியகலாநிதிகளான ஓர் இளம் குடும்பத்தினருக்கு, வைத்தியசாலையில் இருந்து மூன்றுமைல்களுக்குள், இரண்டு அல்லது மூன்று படுக்கை அறைகள்கொண்ட, நவீன வசதிகள், நீர்ச்சேவை மற்றும் கருச்சுடன் கூடிய வீடு, உடனடியாக வாடகைக்குத் தேவை. டாக்டர் ஜே. சேனாதிராசா, டி. எம். ஓ. வங்களா, பருத்தித்துறை" 7993

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ளவர்களும், வேலை பழகுபவர்களும் (Trainees) உடனடியாகத் தேவை. வேலை பழகுபவர்களுக்கு ஜனவரி மாதத்திலிருந்து நாளொன்றிற்கு ரூபா 6/- வரையில் சம்பளமாகக் கொடுக்கப்படும். நீர்வேலிக்கு கிட்டடியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. 7790

பிரபல்யம் வாய்ந்த ரவல் சேவிஸ் ஸ்தாபனத்திற்கு ஆங்கில அறிவுடைய பெண் லிகிதர் தேவை. விண்ணப்ப முகவரி சுபா ரவல் சேவிஸ் 11/G மொம்சக் கட்டிடம் ஸ்டான்லி ரோட் யாழ்ப்பாணம். 7986

### பயிற்சி

கிராமிய புனரமைப்பு விவசாய விரிவாக்கத்தில் பயிற்சி பெறவிரும்புவோர் விபரங்களுக்கு கீழ்உள்ள விலாசத்திற்கு 2/- அனுப்பி விண்ணப்பபடிவத்தை பெறவும். பயிற்சியில் முன்னோடியாகத் திகழ்பவர்களுக்குவெளிநாடுகளில் பயிற்சியும், வேலை வாய்ப்பும் அளிக்கப்படும். 15 ஆண்களும், 10 பெண்களும் தெரிவுசெய்யப்படுவர். 2-1-1978முன் விண்ணப்பிக்க. விபரங்களுக்கு அலுவலகத்தில் தொடர்புகொள்க: செயலாளர், சிறிலங்கா கிராமிய சீர்திருத்தக்கழகம், 70, புங்கன்குள வீதி, யாழ்ப்பாணம். 7999

### WANTED

A steno typist, preferably a female with knowledge of accounts and able to run a new office. An accounts assistant for immediate employment. Secretary SSRR, 70 Punkankulam Road, Jaffna. 7998

## உடுப்பிட்டி பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம்

## விளம்பரம்

உடுப்பிட்டி ப. நோ. கூ. சங்கத்தில் 6000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. 3-1-78க்கு முன்னர் ரூபா 25/- மேற்படி சங்கத்தில் கட்டிக் கேள்விப்பத்திரம் பெற்றுக்கொள்ளவும்.

கேள்விப்பத்திரம் 10-1-78 பகல் 12 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் பின்வரும் விலாசத்திற்கு அனுப்பவும்.

பொது முகாமையாளர்

விலாசம்:

பொதுமுகாமையாளர்,
உடுப்பிட்டி
ப. நோ. கூ. சங்கம்,
உடுப்பிட்டி,
வல்வெட்டித்துறை.

7995

# உங்கள் முதலீடுகளுக்கு நாம் தரும் வட்டியின் விபரங்கள்

## புதிய துரித விளைவு முதலீடு 20 வீத வட்டி

ஏற்றுக்கொள்ளப்படும் ஆகக்குறைந்த தொகை ரூபா 500/-

## துரித விளைவு முதலீடு

உங்கள் முதலீடுகள் 5 வருடங்களில் இருமடங்குக்கு மேலாகும்
ரூபா. 10,000/- வளர்வதைப் பாருங்கள்

3 வருடங்களில் ரூபா 15,800/- ஆகி
4 வருடங்களில் ரூபா **18,390/-** ஆகி
5 வருடங்களில் ரூபா **21,650/-** ஆகின்றது.

ஏற்றுக் கொள்ளப்படும் ஆகக்குறைந்த தொகை ரூபா 4000/-

## கால முதலீடுகள்

வட்டி மாதாந்தம் வழங்கப்படும்

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | வருடங்கள் | 18% | வருடமொன்றிற்கு | |
| 4 | ” | 17% | ” | ” |
| 3 | ” | 16½% | ” | ” |
| 2 | ” | 16% | ” | ” |
| 1½ | ” | 15% | ” | ” |
| 1 | ” | 14% | ” | ” |

## சேமிப்பு முதலீடுகள்

மாதம் ஒன்றிற்கு ரூபா 50/- உடன்
ஒரு கணக்கைத் தொடங்கி அதிக வட்டியை பெறுங்கள்

எங்கள் “காற்றோடு கலந்தது” என்ற தொடர் நாடக நிகழ்ச்சியை இலங்கை வானொலி சேவை இரண்டில் பிரதி சனிக்கிழமைகளில் 5-15—5-30 வரை கேட்டு மகிழ்ந்து பரிசையும் பெறுங்கள்.

# த பினான்ஸ் கம்பனி லிமிட்டட்

191, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7680

தலைமை அலுவலகம்: 3-ம் மாடி, சிலிங்கோ மாளிகை, கொழும்பு. [ஸ்தாபிதம்—1940]

ADVT.

# கலைஞரிடம் மக்கள் நிதி வழங்கினர்

சென்னை, டிச. 22
தி. மு. க. தலைவர் கலைஞர் மு. கருணாநிதியின் தஞ்சாவூர் சுற்றுப்பயணத்தின்போது புயல்நிவாரணப் பணிக்கென, ஒரு லட்சத்துக்கு அதிகமான தொகையை மக்கள் பணமாகவும், தானியமாகவும், உடுதுணிகளாகவும் அன்பளிப்பு செய்தனர். இவைகள் அனைத்தும்தமிழக ஆளுனர் திரு. பிரபுதாஸ் பட்வாரியிடம் கையளிக்கப்படுமென கலைஞர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

இதேசமயம் தமிழகஅரசுக்கு எதிரான 500க்கு அதிகமான மனுக்களை மக்கள் கலைஞரிடம் கையளித்துள்ளனர். கலைஞர் தமது ஆறு நாள் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு நேற்றுமுன்தினம் சென்னை திரும்பினர். (செ)



## ஆக்ராவில விளையாடுகிறார்

[யாழ்ப்பாணம்]
இப்பொழுது, இந்தியாவில் ஆக்ராவில் நடைபெறுகின்ற 8வது தென் கிழக்காசியப் பாடசாலைகளின் உதைபந்தாட்டப் போட்டியில். பங்குபற்றும் இலங்கைப் பாடசாலைகள் உதைபந்தாட்டக் கோஷ்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் நாகலிங்கம் பாலகுமார் தெரிவுசெய்யப்பட்டு இலங்கைக் கோஷ்டியுடன் ஆக்ரா சென்றுள்ளார்.

இவர், உதைபந்தாட்டத்தில் மாத்திரமல்லாமல் கிரிக்கட், மெய்வல்லுநர்ப் போட்டி ஆகியவற்றிலும்பங்குகொண்டு திறம்பட விளையாடிவருவதுடன், 1975ல் யாழ்ப்பாணப் பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டியில் 17 வயதுக்குட்பட்டோர் பிரிவில் ஈட்டி எறிதலில் ஒரு புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார். கொக்குவில் இந்துக்கல்லூரி இல்ல விளையாட்டும் போட்டிகளிலும் பல சாதனைகளை நிலைநாட்டியுள்ள இவர், இலங்கைப் பாடசாலைகள் மெய்வல்லுநர்ப் போட்டியிலும், இலங்கை அமெச்சூர் அத்லெற்றிக் அசோஷியேஷன் மெய்வல்லுனர் போட்டியிலும் யாழ்ப்பாண அமெச்சூர் அத்லெற்றிக் அசோஷியேஷன் போட்டியிலும் பல இடங்களைப் பெற்றுள்ளார். இவர், கொக்குவில் நாகலிங்கம் தம்பதிகளின் இரண்டாவது புதல்வராவார்.

# அமரர் பேரின்பநாயகம் பகிஷ்கரிப்பை ஏன் ஆதரித்தார்?

அமரர் ஹன்டிபேரின்பநாயகம் அவர்களைப்பற்றி கொழும்பு வளாகம் கல்விப்பீடத்தைச் சேர்ந்த திரு. ப. சந்திரசேகரம் அவர்களால் எழுதப்பட்டு கடந்த 15-12-77 திகதிய ஈழநாட்டில் வெளியான கட்டுரையில், டொனமூர் அரசியல் திட்டத்தினர் இலங்கைவாழ் சிறுபான்மை மக்களுக்கு தகுந்த அரசியலுரிமை அளிக்கவில்லையென்று உணர்ந்த அவர் டொனமூர்த்திட்ட பகிஷ்கரிப்பு இயக்கத்தில் பலருடன் சேர்ந்து ஒத்துழைக்க மறுத்தார்'' என்று குறிப்பிடப்பட்டிருப்பது தவறு என்று திரு. சி. சுப்பிரமணியம் சுட்டிக் காட்டியுள்ளார்.

டொனமூர் சீர்திருத்தத் திட்டங்கள் பகிஷ்கரிக்கப்படுவதற்கான காரணத்தை அமரர் பேரின்பநாயகம் அவர்களே 1966ல் வெளியான சுன்னாகம் கந்தரோதயக் கல்லூரியின் 'தஸ்கந்தா' (The Skanda) என்ற சஞ்சிகையில் எழுதியுள்ள கட்டுரையில் குறிப்பிட்டுள்ளதை திரு. சுப்பிரமணியம் மேற்கோள் காட்டியுள்ளார். மேற்படி சஞ்சிகையில் உள்ள குறிக்கப்பட்ட பகுதியின் தமிழ் ஆக்கம் வருமாறு;-

''திருமதி கமலாதேவி சட்டோபாத்யாய தலைமைதாங்கிய வரலாற்று முக்கியத்துவமான மாகாநாட்டில் டொனமூர் சீர்திருத்தங்களை பகிஷ்கரிப்பது என்ற முடிவு எடுக்கப்பட்டது. இதில் சுப்பிரமணியம் மும்முரமாகச் செயல்பட்டார், இந்தத் தீர்மானத்தையும் அதைத் தொடர்ந்து வந்த பகிஷ்கரிப்பையும் பொறுப்புள்ள சிங்களத் தலைவர்கள் பலர் வலுப்புவாத முக்கியத்துவம் கொடுத்துநோக்கலானார்கள்.

ஒரு மகாநாட்டில் நானும் காலஞ்சென்ற எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவும் சந்திக்க நேர்ந்தபோது அவரைத் திருத்தும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்ததாக நினைவிருக்கிறது. அந்தப் பகிஷ்கரிப்பு வகுப்புவாத நோக்கங்களினால் உந்தப்பட்டது என அவர் கருதினார். இவ்வாறு மிகக்காலம் தாழ்த்தி தவறிழைத்தவர் திரு. எச். ஏ. ஜே. ஹலுகல்லஆவார். அவர் எழுதிய டி. ஆர். விஜவர்த்தனாவின் சுயசரிதத்தில் இந்த அவதூற்றை மீளவும்செய்துள்ளார். எமது வாழ்க்கையையும் சுதந்திர ஐக்கியஇலங்கைஎன்ற லட்சியத்துக்காக நாம் செய்துள்ள தியாகங்களையும் உன்னிப்பாக அவதானித்த எவரும் இந்தக்கருத்தை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

பூரணசுதந்திரமென்ற லட்சியத்துக்கு மிகத் தூரமாக டொனமூர் சீர்திருத்தங்கள் அமைந்திருந்ததினாலேயேபகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

### கறுப்புக்கொடிஆர்ப்பாட்ட எதிரொலி:

# மக்களுக்கு வசதியான இடத்தில் விசாரணையை வையுங்கள்

## கமிஷனிடம் தி. மு. க. கோரிக்கை

சென்னை, டிச. 22
''போக்குவரத்துவசதியற்ற பொதுமக்கள் பங்கெடுத்துக் கொள்ளமுடியாத நிலையில், சோமசுந்தரம் விசாரணைக்கமிஷனை நடாத்துவதில் அர்த்தமில்லை. எனவே கமிஷன் விசாரணையை அண்ணா சாலையில், அல்லது ஜார்ஜ் டவுணில் நடாத்தவேண்டுமென, விசாரணைக்கமிஷன் முன், தி. மு. கழக வழக்கறிஞர் பாளையங்கோட்டை சண்முகம் றிட்மனு ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

முன்னைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திசென்னை விஜயத்தின்போது. இடம்பெற்றவன்செயல்களையடுத்து, நால்வர் துப்பாக்கிப்பிரயோகத்தில் இறந்தமை குறித்து, தனிநபர் விசாரணைக்கமிஷன் நியமிக்கப்பட்டதுதெரிந்ததே.

இக்கமிஷன் சென்னையில் கிறின்வேல்ஸ் சாலையில் ஓய்வு பெற்ற நீதியசர் திரு. சோமசுந்தரம் தலைமையில்நடைபெற்று வருகின்றது.

பஸ்சாலையிலிருந்து 12கிலோமைல் தூரத்தில் இவ் விசாரணை நடைபெறுவதால் மக்கள் தாமாக வந்து சாட்சியமளிக்கமுடியாதுள்ளனர். இதைவிட சாட்சியமளிப்பவர்கள் பொய்ச்சாட்சியம் அளிப்பவர்களைக் கண்காணிக்க பார்வையாளர்களும், அதிக பணம் கொடுத்து பிரயாணம் செய்து சமுகமளிக்கமுடியாமல் உள்ளது. எனவே விசாரணைக் கமிஷன் நடைபெறுமிடத்தை மக்களுக்கு வசதியாக மாற்றும்படி கோருகிறேன் என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது. [கெ]

# மாநிலங்களுக்கு அதிக அதிகாரம்; மத்திய அரசை பலவீனப்படுத்தாது

## வங்க முதல்வர் சொல்கிறார்

பெங்களூர், டிச. 22
''மாநிலங்கள் வலிமை மிக்கனவாய் இருந்தால்தான் மத்திய அரசும் வலிமைமிக்கதாய் அமையும்'' என ஆந்திராவில் ஏற்பட்ட புயல் அழிவு குறித்து பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்ட மேற்குவங்க முதல்வர் திரு. ஜோதிபாசு நிருபர்கள் மத்தியில் இக்கருத்தை வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''சிலர் நினைப்பதுபோல, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டால், அது மத்திய அரசைப் பலவீனப்படுத்துமென எண்ணுவது தவறு. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டால், வலிமை பெறும்போது, மத்திய அரசும்வலிமைபெறும்'' எனக் குறிப்பிட்டார். [கெ]

# மகாஜன செயல்திட்ட மாணவர் நடத்திய விழா

(பண்டத்தரிப்பு)
''மாணவர்கள் பாடசாலைகளில் கல்வி கற்பதுடன் நின்றுவிடாது சமூகப்பணிகளிலும் ஈடுபடவேண்டும். இதனைக் கருத்திற்கொண்டே உயர் வகுப்பு மாணவர்களுக்குச் செயல்திட்டத்தை ஒரு பாடமாக அரசாங்கம் அங்கீகரித்துள்ளது'' என்று இளவாலை வடக்கு கலைமகள் பாலர்கழக ஆண்டு நிறைவு விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றுகையில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி அதிபர் திரு. பொ. கனகசபாபதி கூறினார்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி செயல்திட்டமாணவர்களினால் ஒழுங்குசெய்யப்பட்ட இவ்விழாவில் சிவதர்மவள்ளல் க. கனகராசா கலந்து கொண்டு அப்பகுதி மக்களுக்கு இலவசமாக எலுமிச்சை, பலா, மா போன்ற மரக்கன்றுகளை வழங்கினார்.

திரு. க. சி. குலரத்தினம், அளவெட்டி அருணோதயக் கல்லூரி அதிபர் திரு. மு. சிவராசரத்தினம், இளவாலை கனகசபை வித்தியாசாலை அதிபர் சைவப்புலவர் வ. செல்லையா, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு. எஸ். நடராசா ஆகியோர் உட்படப் பலர் இவ் விழாவில் உரையாற்றினார்கள்.

வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி நா. கனகராசா வழங்கினார். கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (அ)

### கற்பழிப்பு வழக்கில்

# தமிழ்க் கான்ஸ்டபிளுக்கு 7 வருடக் கடூழியம்

(காலி)
பதின்மூன்று வயதுச் சிறுமியைக் கற்பழித்ததாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில், 38 வயதான நாகமுத்து சிதம்பரன் என்ற பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு 7 வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இவ்வழக்கு காலி மேல்நீதிமன்றத்தில் நீதிபதி பி. டீ. சில்வா முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் 1974ம் ஆண்டு ஜூன் மாதம் 10ந் தேதி, முல்லைத்தீவைச் சேர்ந்த நாகமுத்து சிதம்பரன் என்ற பொலிஸ் கான்ஸ்டபிள் 13 வயதுச் சிறுமியான நந்தகிலியை எல்பிட்டியா பொலிஸ் நிலைய விடுதியில் வைத்துப் பலாத்காரம் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இவ்வழக்கு, தமிழ்பேசும் ஜூரிமார் முன்னிலையில் நடைபெற்றது. இதற்காக 2 பேன்சுருக்கெழுத்தாளர், கொழும்பு மேல் நீதிமன்றக் காரியாலயத்திலிருந்து அழைக்கப்பட்டிருந்தனர்.

தமிழ்பேசும் ஜூரிகளின் சம்மதத்துடன், அரச சட்டத்தரணியும், எதிர் தரப்புச் சட்டத்தரணியும் சிங்களத்தில் தொகுப்புரை நிகழ்த்தினார்கள். நீதிபதி ஜூரிசபையினருக்கு ஆங்கிலத்தில் உரை நிகழ்த்தினர். நீதிபதியின் உரை தமிழிலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டது.

கொழும்பு நீதிமன்றத்தில் இருந்து அழைக்கப்பட்டிருந்த நீதிமன்ற முதலியார் கே. ஸ்ரீபதிதாசன் தமிழ் மொழிபெயர்ப்புச் செய்தார்.

ஜூரி சபையினர் 5-2 ஆகப் பிரிந்து, எதிரி குற்றவாளியெனத் தீர்ப்பளித்தனர்.

நீதிபதி எதிரிக்கு 7 வருடச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கையில் ''இது ஒரு பாரதூரமான குற்றமென்றும் சமூகத்திற்கு ஒரு படிப்பினையாக எதிரியைத் தண்டிக்க வேண்டியது நீதிமன்றத்தின் கடமை'' என்றும் கூறினார்.

## இடமாற்றம்

(திருக்கோணமலை)
திருகோணமலைப் பிராந்திய நெற்சந்தைப்படுத்தும் சபையின் பிராந்தியமுகாமையாளர் திரு. ஆர். வீரராகவன், அம்பாறைப் பிராந்திய நெற்சந்தைப்படுத்தும்சபைக்கு மாற்றலாகிச் சென்றுள்ளார்.

## ''அரசாங்கச் செயலகம் வேண்டும்''

(திருகோணமலை)
திருகோணமலையில்அரசாங்க செயலகம் ஒன்றினைக் கட்டித்தரும்படி திருகோணமலை அரசாங்க அதிபர் திரு. எரிக் டி சில்வா பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் திரு. கொண்டேரு ஜெயவிக்கிரமாவிடம் கோரியுள்ளார்.

இங்கு அரசாங்க இலாகாக்கள் பல பாகங்களிலும் பரந்து இடம்பெறுவதன் காரணத்தால் பொதுமக்கள் பெருங்கிரமத்திற்குள்ளாகின்றார்கள் என்றும் இதனைத்தவிர்க்கவே செயலகத்திற்கான ஒழுங்குகளை உடனடியாகச் செய்து தருமாறும் அவர் தமது கோரிக்கையைத் தெரிவித்துள்ளார். [ட]

# தமிழன்நல்வாழ்வுவிரும்பும் கலைஞரின் இதயம்!

## மன்னார் எம். பி. பாராட்டு

[கொழும்பு]
''உலகில் தமிழன் எந்தமூலையில் வாழ்ந்தாலும் அவனுக்காகக்கவலைகொண்டு கண்ணீர் வடிக்கும் ஒரு தலைவன் இருக்க கூடியுமென்றால் அது டாக்டர் கலைஞர் கருணாநிதி ஆகத்தான் இருக்க முடியும்'' என்று இலங்கையின் தலைநகராகிய கொழும்பிலே விவேகானந்த சபை மண்டபத்தில் கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்றம் நடாத்திய உலகத்தமிழர் உரிமைக்குப் போராடும் கலைஞர் கருணாநிதி பாராட்டுவிழாவில் மன்னார் எம். பி. திரு. சூசைதாசன் குறிப்பிட்டார்.

கலைஞர் கருணாநிதி பொதுப் பணி மன்றத்தின் தலைவர் திரு. க. நவசோதி தனது தலைமையுரையில் ''உலகின் ஒப்பற்ற தலைவராக விளங்கும் கலைஞர் கருணாநிதி அவர்களை விழுங்கச் செய்யுமாறு இலண்டனிலும், பாரிஸிலும், டெல்லியிலும், இலங்கையிலும் ஆர்ப்பாட்டங்கள் நடந்திருக்கின்றதென்றால் அலைகடலுக்கப்பால் வாழும் லட்சோபலட்சக்கணக்கான மக்களின் இதயக்கனைக் கவர்ந்த மாபெரும் தலைவரே கலைஞர் என்பதை அது எவ்வித சந்தேகமுமின்றி நிரூபித்துள்ளதையே உலகுக்கு உணர்த்தி நிற்கின்றது'' என்னார்.

தமிழகம் காயல் பட்டணத்திலிருந்து வருகை தந்திருந்த தி. மு. க. உறுப்பினர் திரு. எல். கே. இப்ராகீம் பேசுகையில் ''தமிழகத்திலே எம். ஜி. ஆர். அரசின் மோசடித்தன்மையையும் ஊழல்களையும் தமிழக மக்கள் உணரத்தொடங்கித் தாம்செய்த தவறுக்காக வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்'' என்று குறிப்பிட்டார்.

## சிலர் கைது

(திருக்கோணமலை)
திருமலை நகரவட்டத்தில் கோமரங்கடவெல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முகாமைக் கட்டடம் கட்டுமானப் பணத்தை மக்கள் கூட்டத்தில் வீண்விரயம் செய்துவருகின்றனர் என்ற தகவலைத் தொடர்ந்து பொலிசார் நடத்திய திடீர் வேட்டையில் சிலர் சிக்கிக் கொண்டனர். (அ)

சுசி

∴ கலண்டர்கள்
∴ டயறிகள்
∴ பிளாஸ்டிக் டயறிகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்

வடபகுதி விநியோகஸ்தர்கள்
S. P. சாமி அன் கொம்பனி
193, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

**ராணி** [யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2.30, 6·00, 9.30.
எம். ஜி. ஆர்.-விஜயா, நாகேஷ் நடித்த
**வி வ சா யி**
(புதிய பிரதி)

12-வது ஜனத்திரள் வாரம்!
**ராஜா** யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
ஜெமினி, விஜயகுமாரி, கே. ஆர். விஜயா நடித்த
**தசாவதாரம்**
பாடசாலை மாணவர்கள் ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளவும்.
தந்தை செல்வாவின் இறுதியாத்திரை வெகு விரைவில் இப்படத்துடன் காண்பிக்கப்படும்.

**சாந்தி** (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெமினி - சாவித்திரி (இருவேடங்களில்)
ரங்கராவ், M R ராதா
**காத்திருந்த கண்கள்**
(புதிய பிரதி)

**Regal** (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 P. M. only
Jack Palance
in
**THE Mc MASTERS**
(Action Films Color)

**மனோஹரா** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி- ஜெமினி - லக்ஷ்மி - நிர்மலா
**உனக்காக நான்**
(ஈஸ்ட்மன் கலர்)

**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமல்ஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
**மூன்று முடிச்சு**
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

**ஸ்ரீதர் இன்று முதல்**
(யாழ்ப்பாணம்) நத்தார் புதுவருட வெளியீடு
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்
★ முத்துராமன் ★ ஜெயசித்ரா
★ சுந்தரராஜன் ★ ஸ்ரீகாந்த்
வி. கே. ராமசாமி, தேங்காய் சீனிவாசன்
குமாரி பத்மினி நடித்த
அவள் ஒரு தொடர்கதை, பெண் தெய்வம் வரிசையில் மற்றுமோர் வெற்றிப் படைப்பு.
**இன்ஸ்பெக்டர் மனைவி**
திரைக்கதை, வசனம் டைரக்ஷன்
A. C. திருலோகசந்தர் M. A.
இசை, இன்னிசை வேந்தர்கள்
சங்கர், கணேஷ்

யாழ். நவீனசந்தையை

# அமைச்சர் பிரேமதாசா திறந்துவைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

சுமார் 15 லட்சம் ரூபா ரூபா செலவில் அமைக்கப் பட்டுவரும் யாழ். நவீன சந்தை இரண்டாம் கட்ட வேலைகள் பூர்த்தியாகும் நிலையில் உள்ளது.

இக்கட்டிடத்தை உள்ளூராட்சி, வீடமைப்பு அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவைக் கொண்டு திறந்துவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டுவருகிறது.

எதிர்வரும் பெப்ரவரி முதல் வாரத்தில் இக்கட்டிடத்திறப்பு விழா நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நவீன சந்தை புதிய கட்டிடத்தின் மேல் மாடியில் இரு தியேட்டர்கள் இடம் பெறும். நடுவில் மாநாட்டு மண்டபமொன்று இடம் பெறும். தியேட்டர்களில் ஒன்றில் சிறுவர்களுக்கான படங்கள் திரையிடப்படும். மற்றத்தியேட்டரில், சினிமா படங்கள் திரையிடப்படும்.

புதிய கட்டடத்தின் கீழ்ப் பகுதியில் 38 கடைகள் கட்டப்பட்டுள்ளன. (க-அ)

# டெண்டர் மூலமே கடைகள் வழங்கப்படும்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான எந்தக் கட்டிடங்களும் கடைகளும் காலி இடம் வரும் போது டெண்டர் முறை மூலமே வழங்கப்படும்.

யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு.கே.சிவஞானம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

விண்ணப்பங்கள் மூலமோ அல்லது நேரடியாக மனுச் செய்தோ கடைகளை எவரும் பெற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

சட்டத்தின்படியே எதுவும் நடைபெறுமென்றும் சட்டத்திற்கு அமைய டெண்டர் முறையே கையாளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-அ)

# இந்தக்கடைகள் தை 10-ல் திறந்துவைக்கப்படும்

[யாழ்ப்பாணம்]

ஆகஸ்ட் கலவரத்தின்போது தீக்கிரையான பழைய மார்க்கட், பஸ் நிலையப் பகுதிகளில் புதிதாகக் கட்டப்பட்டுவரும் கடைகள் ஜனவரி 10ம் தேதி திறந்துவைக்கப் படவிருக்கின்றன.

இக்கடைகள் யாவும் பூர்த்தியாகும் நிலையிலுள்ளன. ஜனவரி 1-ம் தேதி பஸ் நிலையத்திற்கு எதிரிலுள்ள கடைகள், ஒப்பந்தகாரரினால் மாநகரசபையிடம் கையளிக்கப்படும்.

பழைய மார்க்கட்டிலுள்ள கடைகள்வேலைகள்சிறிதுதாமதமானாலும், ஜனவரி 8ம் தேதிக்குமுன் மாநகசபையிடம் கையளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இக் கடைகளை இம்மாதம்முதலாம் தேதிக்குமுன் பூர்த்தியாக்கவேண்டுமென மாநகர சபை விசேஷ ஆணையாளர் திரு கே சிவஞானம் அடிக்கல் நாட்டும் போது, ஒப்பந்தகாரரிடம் கூறியிருந்தார்.

மழை காரணமாக இக்கட்டடங்கள் குறித்தநாளில் பூர்த்தியாகாமல் போனதால் மேலும் 15 நாள் அவகாசம் அளிக்கப் பட்டது. அதன்படி இம்மாதம் முடியும்வரை அவகாசம் வழங்கப்பட்டது.

சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில், பஸ் நிலையத்திற்கு எதிரில் 27 கடைகளும், பழைய மார்க்கட்டில் 104 கடைகளும் கட்டப்பட்டு வருவது தெரிந்ததே.

இக்கடைகள் யாவும்கலவரத்தின் போது கடைகளை இழந்த பழைய உரிமையாளர்களுக்கே வழங்கப்படும். [க-அ]

**RIO** Daily 4 Shows
(Jaffna)
SIGN OF THE GLADIATOR
Color- Scope

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி, 2-30, 6-30, 9-30
சிவாஜி — ஜெமினி
**பந்தபாசம்**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-45
ரவிச்சந்திரன்-ராஜன்
**டில்லிமாப்பிள்ளை**

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி பி.ப. 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம்.ஜி.ஆர்-லதா
**உழைக்கும் கரங்கள்**

தை 1-ம் திகதியிலிருந்து

# பொதுமக்கள் பாவனைக்கு யாழ். நகரமண்டபம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் நகரமண்டபம் மீண்டும் எதிர்வரும் ஜனவரி 1-ந் திகதி முதல் பொதுமக்கள் பாவனைக்கு வருகிறது.

அமரர் ஏ. ரீ. துரையப்பா மேயராக இருந்த காலத்தில் நகரமண்டபம் சினிமா தியேட்டருக்காக வழங்கப்பட்டது. இதனால் பொதுவைபவங்கள் நடத்துவதற்கும் உத்தியோக பூர்வமான வரவேற்பு வைபவங்களுக்கும் நகரமண்டபமில்லாதது பெரும் குறையென வரியிறுப்பாளர் வலியுறுத்தி வந்தனர்.

யாழ். மாநகர விசேஷ ஆணையாளர் திரு. கே. சிவஞானம் எடுத்த முயற்சியினால் மீண்டும் நகரமண்டபம் பொதுமக்கள் பாவனைக்கு வருகிறது.

இம்மாதம் 31-ந் திகதி நகரமண்டபத்தை மாநகர சபையிடம் ஒப்படைக்குமாறு இறுதி அறிவித்தல் அனுப்பப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (க-அ)

## உறுதிப்படுத்தக் கோரிக்கை

[நெல்லியடி]

பாடசாலை மாணவர்களின் நன்கொடைப்பணத்தில் கல்வி கற்பித்துவரும் ஆசிரியர்கள்— ஆசிரியைகள் தமது நியமனம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்று உடுப்பிட்டித் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. த. இராசலிங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்கள். திரு. இராசலிங்கம் மேற்படி ஆசிரியர்கள் விடயம் சம்பந்தமாக கல்வி அமைச்சர் கல்வியமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகளையும் சந்தித்துப் பேசவுள்ளார் [உ]

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கணேஷ்
**மூத்தான முத்தல்லவோ**

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ். நகர்) போன்: 7693
**நீதிக்கு தலைவணங்கு**

### மணிவாக்கு

நோயுற்ற உடலைத்தாங்கிக்கொள்ளலாம். ஆனால் நோயுற்றமனதைத் தாங்க முடியாது.

—காந்திமகான்

ஈழநாடு
The Eelanaadu

## வட்டு பா. உ. வின் கோரிக்கை

தேசிய அரசுப் பேரவையில் விஞ்ஞான அலுவல்கள் கைத்தொழில் அமைச்சின் நிதிஒதுக்கீடுகள்மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய வட்டுக்கோட்டை தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. ரி. திருநாவுக்கரசு முக்கியமான பல விஷயங்களை அரசிடம் வற்புறுத்தியிருக்கிறார்.

கைத்தொழில் கூட்டுத்தாபனங்களில் 15 சத வீதப் பங்கை அக்கூட்டுத்தாபனங்களில் தொழில்புரியும் ஊழியர்களுக்கும், 30 வீதத்தை பொதுமக்களுக்கும் பகிர்ந்தளிக்கவேண்டும். ஃ காலதாமதமின்றி வடபகுதியில் பனம்பொருள் ஆராய்ச்சி நிலையமொன்றை நிறுவ வேண்டும். ஃ கைத்தொழில் அமைச்சின் நிர்வாகம் பன்முகப்படுத்தப்படவேண்டும். ஃ பருத்தித்துறையில் கண்ணாடித் தொழிற்சாலை யொன்றை நிறுவவேண்டும். ஃ கைத்தொழில் சம்பந்தமாக சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் வெளியிடுவதைப்போன்று தமிழிலும் சஞ்சிகையொன்றை வெளியிட வேண்டும்.

வட்டுக்கோட்டை உறுப்பினர் வலியுறுத்தியுள்ள முக்கிய விஷயங்களில் இவை சிலவாகும்.

இதுதொடர்பாக அவர் சபையில் பேசும்போது மூல வளங்கள் எங்கிருக்கின்றனவோ அப்பகுதியிலேயே கைத்தொழிலை ஆரம்பிக்க வேண்டும் என்பதைத் தெளிவுபட எடுத்தியம்பியுள்ளார்.

முன்னர் காலிப்பகுதியில் அமைக்கப்பட்ட இமெந்து தொழிற்சாலைக்கு வடக்கிலிருந்தே மூலப்பொருட்கள் கொண்டு செல்லப்பட்டது என்றும் இதனால் அரசுக்குப் பெருந்தசெலவு ஏற்பட்டது என்றும் சுட்டிக்காட்டிய வட்டுக்கோட்டை உறுப்பினர் ஒருசிலரின் திருப்திக்காக மூலப்பொருட்கள் இல்லாத இடங்களில் தொழில்களை ஆரம்பிப்பது பேதமையாகும் என்பதை விளக்கியுள்ளார்.

இந்த வகையில் பருத்தித்துறையில் கண்ணாடித் தொழிற்சாலை யொன்றை நிறுவவேண்டும் என்ற அவரது கோரிக்கையின் நியாயத்தை அரசு அனுதாபத்துடன் ஏற்றுக்கொள்ளும் என்றே நாம் எதிர்பார்க்கிறோம்.

இப்பகுதியில் கண்ணாடித் தொழிற்சாலையொன்று நிறுவப்படவேண்டும் என்ற கோரிக்கை பலகாலமாகவே இருந்துவருகின்றது. இதற்கான மூலப்பொருள்கள் இங்கேயே கிடைக்கும் வாய்ப்பிருப்பதால் நாட்டின் கண்ணாடிப் பொருட்களின் தேவையைப் பூர்த்திசெய்து கொள்வதற்கும் தரமான கண்ணாடிப் பொருட்களை உற்பத்திசெய்யவும் வசதியாய் இருக்கும். இப்பகுதியில் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கவும் உதவியாய் இருக்கும்.

எனவே பருத்தித்துறையில் கண்ணாடித் தொழிற்சாலையொன்றை நிறுவுவது பற்றி கைத்தொழில் அமைச்சு முனைப்பாகக் கவனம் செலுத்தவேண்டும் என்று வலியுறுத்த விரும்புகிறோம்.

காங்கேசன்துறை—கொழும்பு:

# மற்றுமொரு ரயில்சேவை ஆரம்பிக்கப்பட வேண்டும்!

### பேரவையில் முல்லைத்தீவு எம். பி. கோரிக்கை

[கொழும்பு]

'ஓமந்தையில் நல்ல வசதிகளைக் கொண்ட, தரமான ரயில் நிலையமொன்று புதிதாக அமைக்கப்பட வேண்டும். கொழும்புக்கும் அனுராதபுரத்துக்குமிடையே சேவையிலீடுபடும் 'ரஜரட்ட ரஜனி' கடுகதி ரயில் சேவையை வவுனியா வரை நீடிக்க வேண்டும்' என்று தேசிய அரசுப் பேரவையில் நேற்று பேசிய முல்லைத்தீவு எம்.பி. திரு. எக்ஸ் எம். செல்லத்தம்பு கோரிக்கை விடுத்தார்.

தேசிய அரசுப் பேரவையில் நேற்று போக்குவரத்து அமைச்சு மான்யம் மீதான குழுநிலைவிவாதத்தில் பேசுகையில் தான் முல்லைத்தீவுஎம்.பி.மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார். அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

#### இ. போ. ச.

'இலங்கை போக்குவரத்துச் சபை நஷ்டத்தில் இயங்குகிறது என்பதைக் கேள்விப்படும் போது ஆச்சரியமாக இருக்கிறது!

பஸ் சேவை தேசிய மயமாக்கப்படுவதற்கு முன்னர் தனியார் பொறுப்பில் இருந்த போது பஸ் சேவை சிறப்பாக இருந்ததுடன் பஸ் முதலாளிகளின் உழைப்பும் கூடுதலாகவே காணப்பட்டது. ஆனால், தேசிய மயமாக்கப்பட்ட பின்னர் பஸ் சேவை திருப்திகரமில்லாததுடன்தொடர்ந்து நஷ்டமும் ஏற்பட்டு வருகிறது.

'நிர்வாகத் திறமையின்மை உதிரிப்பாகங்கள் இல்லாதது, அரசியலில் ஈடுபாடுகள் தலையீடுகள் ஆகியவை இ. போ. சபையின்நஷ்டத்துக்கும் திருப்தியற்ற சேவைக்கும் காரணம் என்று சொல்லலாம்.

'அனுபவமில்லாத பஸ்சாரதிகளை வேலைக்கமர்த்துவதன் மூலம் விபத்துக்கள் ஏற்படுகின்றன. மக்களும் பலியாகின்றனர். இதில் அரசியலைப் புகுத்தி, பல கட்சிக் கூட்டங்களுக்கும் பஸ்களைச் சேவையிலீடுபடுத்துவதன் மூலம் நஷ்டம் ஏற்படுவதுடன், அரசியல் காரணமாக ஊழியர்களிடையே பிளவு தலைதூக்கிறது, சேவைகளும் பாதிக்கப்படுகிறது.

'இ. போ. சபையை பன் முகப்படுத்த வேண்டும். போதிய உதிரிப்பாகங்களை வரவழைத்து நிர்வாகத்தில் திறமையானவர்களை நியமித்து மக்களுக்கு நல்ல சேவை அளிக்கவேண்டும்.

#### ரயில் சேவை

"காங்கேசன்துறையிலிருந்து கொழும்புக்கு இப்பொழுது சேவையிலீடுபட்டிருக்கும் ரயில் சேவைகளுடன் மேலதிகமாக மற்றுமொரு ரயில்சேவையையும் ஆரம்பிக்கவேண்டும்.

"பலசமயங்களில் இடவசதி இல்லாததால் இந்த 230 மைல் தூர பிரயாணத்தின் போதும் நின்றுகொண்டே செல்ல வேண்டியிருக்கிறது. ருமேனிய நாட்டு ரயில் பெட்டிகள் மிகவும் வசதிக்குறைவாக இருக்கிறது. இதுகுறித்து முன்னரும் பலதடவைகள் இப்பேரவையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்விஷயத்தில் கவனம் செலுத்தப்படவேண்டும்

"யாழ்ப்பாணத்திலிருந்து மரக்கறி வகைகள் பஸ்களிலும் லொறிகளிலும் வெளி இடங்களுக்குச் செல்கிறது. போதிய 'வாகன்'கள் இணைக்கப்பட்டால் கூடுதலான மரக்கறிகளை வெளியிடங்களுக்கு ரயில்மூலம் அனுப்பிவைக்கமுடியும்" என்றுமுல்லைத்தீவுஎம்.பி திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு பேரவையில் கூறினார். (ம)

## வானொலியில் இன்று

இன்று வெள்ளிக்கிழமை இரவு 9-45 தொடக்கம் 10-30 வரை வைத்தியகலாநிதி பா. சோ. பாரதியினால் ஈழத்துச் சிதம்பரம் தொடர்பாக எழுதப்பெற்ற 'ஆதிரையான் அருள்' என்னும் இசைச் சித்திரம் இலங்கை வானொலி தமிழ்சேவை ஒன்றில் ஒலிபரப்பாகும். [அ]

## பேராசிரியர் சுந்தரமூர்த்தி சொற்பொழிவு

[யாழ்ப்பாணம்]

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தமிழ் துறைப் பேராசிரியர் திரு. கு. சுந்தரமூர்த்தி இன்று காலை 6 மணிக்கு கொழும்புத்துறை மன்றுளாடும் பிள்ளையார் கோவிலில் திரு. ஈழவேந்தன் தலைமையில் சொற்பொழிவாற்றுவார். லும் மாலை 6மணிக்கு ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்திப் சொற்பொழிவாற்றுவார்.

நாளை சனிக்கிழமைபிற்பகல் 4 மணிக்கு யாழ். வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும் ஞாயிறு மாலை 6 மணிக்குச் சுன்னாகம் கதிரமலைச்சிவன் கோவிலிலும் இரவு 9 மணிக்கு ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்திலும் பேராசிரியர் உரை நிகழ்த்துவார். [அ]

## கொடிகாமம் துப்பாக்கிச்சம்பவம்

[யாழ்ப்பாணம்]

கொடிகாமம் கிராமிய வங்கியில் காவல் புரிந்த பொலிஸ் கான்ஸ்டபிளின் துப்பாக்கி வெடித்ததினால் வங்கிக் கட்டிடச் சுவர் சேதமடைந்தது.

வங்கியில், அந்நேரம் கடமையாற்றிய கடன்பகுதி முகாமையாளர் திருமதி சரோஜாதேவி வங்கி முகாமையாளர் திரு. மு. கனகலிங்கம், காசாளர் திரு.யோகராசா, லிகிதர் திரு. தருமலிங்கம் ஆகியோர் தெய்வாதீனமாகக் காயங்களின்றித் தப்பினர்.

துப்பாக்கி தவறுதலாக வெடித்ததாகவும், கான்ஸ்டபிளின் கவனயீனத்தினாலேயே இச்சம்பவம் நடந்ததாகவும், பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது. கடமையாற்றிய மட்டுவிலைச் சேர்ந்த கான்ஸ்டபிள் வி. பாலசிங்கம் வேலையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரிக் கிராமியவங்கியில் இச்சம்பவம் நடந்ததாக நேற்றைய 'ஈழநாட்டில்'வெளிவந்த செய்தி தவறானதாகும். [க-அ]

## அரபு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிய ஒரு திட்டமும் இப்பொழுது ஆராயப்பட்டுவருவதாக ஏஜன்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

## பஸ்சேவை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டி-குருநாகல் பாதையில் மாவத்தகம என்னுமிடத்தில் மரமொன்று வீழ்ந்ததால், பஸ்பிரயாணிகள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகினர்.

பஸ்சேவை சீர்குலைந்ததால் பிரயாணிகள் நீண்டதூரம் நடக்கவேண்டியேற்பட்டது. பொருள்களுடன், குழந்தைகளை சுமந்தவண்ணம் பஸ் பிரயாணிகள் அதிக தூரம் நடந்து சென்றே மீண்டும் பஸ் ஏறி பிரயாணம் செய்தனர்.

## வடக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கு போக்குவரத்து அமைச்சர் ஜனுப் மொகமட் பதிலளிக்கையில்;

### வடக்கு—கிழக்கு ரயில் சேவை

"காங்கேசன்துறை - மட்டக்களப்பு (வடக்கு-கிழக்கு) நேரடி ரயில்சேவை விரைவில் ஆரம்பமாகும்" என்று உறுதிமொழிஅளித்தார்.

பஸ் சேவைபற்றி அமைச்சர் குறிப்பிடுகையில்; அடுத்தவருடம் மே மாதத்துக்கு முன்னர் 850 பஸ்கள் இங்குவந்து சேரும் என்றும், தற்போது 200 பஸ்கள் இலங்கைக்குவந்து கொண்டிருக்கிறதென்றும் கூறினார்.

"நகரப்புறங்களைப் பொறுத்தவரை பஸ் சேவையில் பெருமாற்றம் ஏற்பட்டுவிட்டது. கிராமப்புறங்களில்தான் அதிக கவனம் செலுத்தவேண்டியுள்ளது" என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ம)

அன்ரனிராசு கொலை:

## சந்தேகநபர் சரண்!

[யாழ்ப்பாணம்]

ஆசைநாயகியுடன் இருந்த போது பலத்த வெட்டுக்காயங்களுக்கு இலக்காகிய திட்டியைச் சேர்ந்த அன்ரனிராசு கொலை தொடர்பான சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் சரணடைந்தனர்.

யாழ்ப்பாணம் பதில் நீதிபதி திரு எஸ். அமிர்தலிங்கம் முன்னிலையில், சந்தேக நபர்கள், சட்டத்தரணி ஏ. அன்ரனி மூலம் சரணடைந்தனர்.

சந்தேக நபர்களான சி. தம்பியான், அந்தோனிப்பிள்ளை, ச. மாணிக்கை, செ. ஆசையாசா ஆகியோரை, ரிமாண்டில் வைக்குமாறு பதில் நீதிபதி உத்தரவிட்டார். (க)

## பேரவையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு பேசுகையில், இ. போ. சபைக்குள்ள கடன்கள் அடைக்கப்பட்டாலன்றி நாட்டின் பஸ்சேவை சீரடையமுடியாது என்றார். (ம)

## இன்று

[யாழ்ப்பாணம்]

சி-நோர் வலைத் தொழிற்சாலையில், இன்று மாலை "ஒளிவிழா" என்னும் கதம்ப நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இதில் நாடகங்களும் இன்னிசைவிருந்தும் இடம்பெறும். [செ]

## இன்றைய நிகழ்ச்சி

[யாழ்ப்பாணம்]

காரைநகர் மணிவாசகர் சபை ஆதரவில் ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில் நடைபெறும் மணிவாசகர்விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபர் திரு. த. சபாரத்தினம் தலைமையில் விழா நடைபெறும். 6. 15 மணி திருவாசகத் திருமுறை ஓதல், 6. 30 மணி தலைமைப்பேருரை, 7-15 மணி திரு. க. கந்தசாமி உரைநிகழ்த்துவார். 8 மணி திரு. கு. சுந்தரமூர்த்தி உரை நிகழ்த்துவார். 9 மணி திருவாசகத்திருமுறை ஓதல்.

## தண்ணீர் விரயமாகிறது

[வவுனியா]

வவுனியா அரச தண்ணீர் தாங்கியில் ஒழுக்கு இருப்பதனால் தினமும், கால்பங்கு நீர் வீணை விரயமாகின்றது. இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு புகார் செய்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

'ஈழநாடு' தினக்குறிப்பு 1978

அடுத்த வாரம் முதல் விற்பனையாகும்

விலை:- ரூபா 4-50 சதம்

வியாபாரிகளுக்கு கழிவுண்டு.

தொடர்பு கொள்ளவும்:-

கலாநிலையப் பதிப்பகம்
303, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7707

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The EelanaaduPost Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.